பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ ஆடி மீ 29 உ புதன்கிழமை (15-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 23 கதிர்: 165

# கடலில் தத்தளித்த அகதிகள்;

# 5 நாள் பட்டினியில் 5 பேர் பலி!

## மயங்கிய நிலையில் 22 பேர் மந்திகை ஆஸ்பத்திரியில்

— உதயன் செய்தியாளர்: பா. ரகுநாதன் —

பருத்தித்துறை, ஆகஸ்ட் 15

ஈழத் தமிழ் அகதிகள் 29 பேரை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை முனைப் பகுதியில் இருந்து புறப்பட்ட "பிளாஸ்டிக்" படகு ஒன்று நடுக்கடலில் ஐந்து நாட்கள் தத்தளித்த பின்னர் நேற்றுப் பகல் பருத்தித்துறைக் கரையை வந்தடைந்தது.

படகில் பயணம் செய்த அகதிகளில் ஐந்து பேர் பட்டினியால் உயிரிழந்தனர். 22 பேர் மயக்கமுற்ற நிலையில் இருந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 10. 30 மணியளவில் இவர்கள் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படகோட்டி, அவரது உதவியாளர் ஆகியோருடன் மொத்தம் 29 பேர் இந்தப் படகில் பயணம் செய்தனர்.

படகோட்டி வழி தெரியாமல், படகில் இருந்த டீசல் முடியும் வரை பல திசைகளிலும் படகைச் செலுத்திச் சென்றதாகவும் —

டீசல் முடிவடைந்த பின்னர் நடுக் கடலில் படகு தத்தளித்ததாகவும் —

ஐந்து நாட்கள் தத்தளித்த படகை வழியில் கண்ட இலங்கை கடற்படைக் கப்பலான "வீரசூரியா" பருத்தித்துறைக் கரைக்கு இழுத்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படகில் சென்று பட்டினியால் உயிரிழந்த ஐந்து பேரின் விவரம் வருமாறு:-

★ பருத்தித்துறை வேலாயு

(3ஆம் பக்கம் பார்க்க)

## பாதை தெரியாத படகோட்டி அதனால் வந்த வினை இது!

### தப்பிப் பிழைத்தவர் தகவல்

பருத்தித்துறை, ஆக. 15

படகோட்டிக்குத் தமிழகம் செல்வதற்கான பாதை தெரியாது, அதனால் வந்தவினை தான் இது.

- இப்படிக் கூறினார் அகதிகள்படகில் ஐந்துநாள் தத்தளித்தபின்னர் கரைசேர்ந்த திரு. ஐயாத்துரை அழகத்துரை.

வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் ஆய்வு கூட உதவியாளராகக்கடமையாற்றும் அவர் மேலும் கூறியதாவது;

இந்த பிளாஸ்டிக் படகில் பத்துப்பேருக்குமேல் பயணம் செய்ய முடியாது.

ஆனால் இந்தப்பயணத்தை ஒழுங்கு செய்தவர் 'இனிமேல் படகுகள் போகமாட்டாது;

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் கலைப்பு இன்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 15

"ஈரோஸ்" அமைப்பு கலைக்கப்படுவது சம்பந்தமான அறிவிப்பு இன்று — ஆகஸ்ட் — 15 ஆம் திகதி வெளியிடப்படும் என்றுஎதிர் பார்க்கப்படுகிறது.

ஈரோஸ் அமைப்பின் முக்கிய பிரமுகரும், அவ்வமைப்பின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளருமான திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன் தமது அமைப்பைக் கலைப்பது சம்பந்தமான அறிவிப்பை இன்று விடுப்பார் என சம்பந்தப்பட்டவட்டாரங்களில்இருந்து தெரியவந்தது.

இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை அவர் கூட்டவிருக்கிறார். (உ)

## பலாலிப் பகுதியில் நேற்று விமானக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 15

பலாலிப் பகுதியில் நேற்று மாலை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

அனேகமான குண்டுகள் முகாமை அண்டிய பகுதிகளிலேயே போடப்பட்டன. அங்கு வெடித்த குண்டுகளின் அதிர்வை யாழ். நகரப்பகுதியிலும் உணர முடிந்தது.

சேத விவரங்களை செய்தி அச்சுக்குப் போகும் வரை அறியமுடியவில்லை. (ஒ)

## கொழும்பில் பதற்ற நிலை; ஆயுதப் படையினர் உஷார்!

யாழ்ப்பாணம், ஆக. 15

கொழும்பிலும் தெ ன்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாகத் தெரிய வருகிறது.

கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஆயுதப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் —

கேந்திரப் பகுதிகளில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் — அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் வர்த்தகர்களுக்குப் பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன: முஸ்லிம் இயக்கம் ஒன்றின் பொரிலும் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்தது.

இந்தப் பயமுறுத்தல்களை அடுத்து தலைநகரில் உள்ள தமிழர்களின் கடைகள் பலவும் மூடப்பட்டுவிட்டன. அந்தக் கடைகளில் பணிபுரிந்த சிப்பந்திகள் பலரும் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

எந்த நேரத்திலும், இரு பக்கங்களாலும் தாக்குதலுக்கு ஆளாகலாம் என்ற அச்சத்துடனேயே அங்கு தமிழர்கள் வாழ்ந்து வருவதாக அவர்கள் தகவல் தெரிவித்தனர். (ஒ-3)

## பட்டினிக்கு 2 குழந்தைகளை பறிகொடுத்த இளம் தாய்!

பருத்தித்துறை, ஆக. 15

திருமலையிலிருந்து அகதியாகவந்த இளம் தாய்ஒருத்தி நடுக்கடலில் தத்தளித்த படகில் தனது இரு குழந்தைகளையும் பட்டினிச்சாவில் பறிகொடுத்தார்.

அந்தப் பெண்ணின் மூன்றாவது குழந்தை உயிருக்கு ஊசலாடும் நிலையில்மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திருமதி சூரியமூர்த்தி என்ற பெண்ணே அந்த இளம் தாயாவார். அவர் கூறியதாவது.-

நான் திருமலையில் இதுவரை காலமும் தங்கி இருந்தேன். எனது கணவர் நோர்வேயில் அகதியாக இருக்கிறார்.

திருமலையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நெல்லியடி வந்தேன். இங்கும் பொம்மர் தாக்குதல்கள்இடம் பெற்றதால் இந்தியாசெல்ல முற்பட்டேன்.

இன்று எனது இரண்டு குழந்தைகளையும் இழந்து மூன்றாவது குழந்தை உயிருக்குப் போராடும் நிலையில் பரிதவிக்கின்றேன்.

- என்று கண்ணீர் மல்க அவர் கூறினார். (உ-118)

### சிப்பாய் பலி

மன்னார் நெடுஞ் சாலையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### இரவுத் தாக்கு

பருத்தித்துறை பகுதியின் மீதும் நேற்று அதிகாலை 1.45 மணிமுதல் 2. 15 மணி வரை ஹெலிக்கொப்டரும், பொம்மரும் வட்டமிட்டன.

யாக்கரு பக்கமாக குண்டு வீச்சும் இடம் பெற்றது. (உ-118)

### 10 சிங்களவர் கொலை

கொழும்பு, ஆக. 15

அறந்தலாவயில் நடத்தப்பட்ட திடீர் தாக்குதல் ஒன்றில் பத்துச் சிங்களவர்கள் கொல்லப்பட்டனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன. [ஒ-எ]

### ஜா-பிரேமா சந்திப்பு

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. எஸ். என். ஜா ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவைக் கொழும்பில் நேற்றுச் சந்தித்துப் பேசினார். பேச்சு விவரம் நேற்று வெளியாகவில்லை

இந்தச் சந்திப்பின் போது தமது நியமனப் பத்திரத்தை புதிய ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார். (உ)

## 80 தமிழர் படுகொலை

நேற்று செங்கலடியில் இடம் பெற்ற ஒரு சம்பவத்தில் 80 தமிழர் படுகொலை செய்யப்பட்டதாக நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முஸ்லிம் குழு ஒன்று இவர்களை படுகொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 60 பேரின் சடலங்கள்மீட்கப்பட்டிருப்பதாக கொழும்பில் தமிழ் குழு ஒன்றின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார் என இந்திய வானொலி நேற்று நள்ளிரவு அறிவித்தது. [உ]

## 'பரா' வெளிச்ச உதவியுடன் இரவு நடந்த குண்டு வீச்சு!

யாழ். நகரப் பகுதியில் நேற்று காலை முதல் மாலை வரை எந்தவித விமானத் தாக்குதலும் இடம்பெறவில்லை. மக்கள் பெரும் நிம்மதியுடன் நாளைப் போக்கினர்.

நகர மக்களின் நிம்மதியைக் குலைப்பதற்கென்றே இரவு 8-45 மணியளவில் வந்தது ஹெலி ஒன்று.

நகரை வட்டமிட்ட ஹெலி வேட்டுக்களைத் தீர்த்ததோடு, இடையிடையே ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டது.

இந்தத் தாக்குதல் நடந்து கொண்டிருந்த வேளையில், இரண்டு பொம்மர்களும் வந்தன.

பொம்மர்களுக்கு உதவியாக ஹெலியில் இருந்து "பரா" வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டன.

அதை அடுத்து பொம்மர்கள் குண்டு வீச்சை நடத்தின. சேத விவரங்கள் தெரிய வரவில்லை. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### காணவில்லை

முகமது அலி என்பவரைக் காணவில்லை. மெல்லியஉடல் கட்டையாக தலைமயிர்வெட்டப்பட்டதும், கண்ணாடி அணிந்தும் இருப்பார். சிறிது மூளைக்கோளாறு உடையவர். கண்டவர்கள் தயவு செய்து எரிபொருள்நிலையம், சித்தங்கேணி தங்கராசாவுடன் தொடர்புகொள்ளவும் (13637)

### ஒமேகா

எங்களிடம் திருத்துவதற்கு உங்களால் ஒப்படைக்கப்பட்ட மின் உபகரணங்களை ஏழு நாட்களுக்குள் திருப்பி எடுக்குமாறு பணிவாக வேண்டுகிறோம். ஒமேகா, சேச் லேன், கொக்குவில் கிழக்கு. (குளப்பிட்டிச் சந்திக்கு அருகில்) [14035]

### தவறிவிட்டது

இல. 671721632 X,S மதியழகன் னொடின்ஹில் தோட்டம் காபன் வல எனும் விபரமுடைய அடையாள அட்டை இரு மாதத்திற்குள் தொலைந்து விட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (14034)

# யாழ். மாநகரசபையின் அலுவலகம் மூடப்பட்டது

## அத்தியாவசிய சேவைகள் மட்டுமே

யாழ்ப்பாணம், ஆக 15

யாழ் - மாநகர சபை அலுவலகம் பாதுகாப்பின் நிமித்தம் மூடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள இந்து விடுதியில் தற்காலிகமாக அலுவலகம் இயங்கும்.

யாழ் - மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்தவாரம் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலால் மாநகரசபை அலுவலகம் பெருமளவில் சேதமடைந்தது.

இதைத் தொடர்ந்து அலுவலகம் மூடப்பட்டிருந்தது.

முக்கியமான அத்தியாவசிய சுகாதார வேலைகளை மேற்கொள்ளதற்காலிகமாக இந்து விடுதியில் அலுவலகம் இயங்கும் என்றும், எல்லா ஊழியர்களும் வேலைக்கு வரத் தேவையில்லை என்றும், முக்கிய அதிகாரிகள் மட்டுமே கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (அ-3-5)

## இந்திய சுதந்திர தினம்

புதுடில்லி, ஆக 15

இந்தியாவின் 44 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் இன்றுநடைபெறுகிறது.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தனது சுதந்திரதினச் செய்தியில், பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர் அகதிகளாக தமிழகம் வரும் கொடுமையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## இரண்டு மாதங்களுக்கு வந்த உணவு 1,173 தொன்!

### நேற்றைய செய்திக்குரிய புள்ளிவிவரம்

யாழ்ப்பாணம், ஆக 15

ஜூன் மாதம் 14 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையான இரண்டு மாதங்களில யாழ். மாவட்டத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களில் சுமார் ஐந்து சத வீதமே அரசாங்கத்தால் அனுப்பபப்பட்டது என்ற செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது அல்லவா?

அது சம்பந்தமாக யாழ். செயலகத்தின் உத்தியோக பூர்வ அறிக்கைகளில் இருந்து உதயன் திரட்டிய புள்ளி விவரங்கள் வருமாறு:-

யாழ் - மாவட்டத்துக்குக் கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதியில் இருந்து ஆகஸ்ட் 13 வரையுள்ள இரண்டு மாதங்களுக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும், ஆறாயிரம் மெற்றிக் தொன் மாவும். 4 ஆயிரம் மெற்றிக் தொன் சீனியும் தேவையென யாழ் செயலகம் அரசிடம் தெரிவித்திருந்தது.

இதேவேளை வெளிமாவட்டங்களிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், அரிசி, மா, சீனி ஒவ்வொன்றிலும் மாதாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் மேலதிகமாகத் தேவை எனவும் அரசிடம் கோரிக்கை விடப்பட்டது.

இவற்றுக்குப் பொதுவாக—

கொழும்பில் இருந்து 13-7-90 இல் வாகன அணி மூலம் 10 தொன் அரிசியும், 37 . 5 தொன் மாவும், 17 . 09 தொன் சீனியும்—

மீண்டும் 21 - 7 - 90 இல் வாகன அணி மூலம் 23 . 07 தொன் அரிசியும், 50 தொன் மாவும், 19 . 08 தொன் சீனியும்—

'சிகிரியா' கப்பல் மூலம் 31 - 7 - 90 இல் 175 தொன் அரிசியும், 100 தொன் மாவும், 80 தொன் சீனியும்--

'லங்கா சிறி' கப்பல் மூலம் 4 - 8 - 90 இல் 88 . 05 தொன் அரிசியும், 73 . 8 தொன் சீனியும்—

'சிகிரியா' கப்பல் மூலம் 10 - 8 - 90 இல் 450 தொன் மாவும்— அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டிருந்தன.

அரிசி, மா, சீனி ஆகிய மூன்றிலும் மொத்தம் 1173 மெற்றிக் தொன்களே வந்து சேர்ந்தன.

இவற்றை விட உப உணவுப் பொருளான பருப்பு மூன்று தடவைகளில் மொத்தம் 63 மெற்றிக் தொன் வந்து சேர்ந்தது. அதனோடு விட்டாஸ் பிறே, லக்ஸ்பிறே, மெழுகுதிரி, தீப்பெட்டி ஆகியனவும் குறைந்த அளவில் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டிருந்தன. (அ-3)

## முதலுதவி பயிற்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 15

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் முதலுதவி பயிற்சி பெற்றோருக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9-30 மணி அளவில் நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

நல்லூர் சாதனா பாடசாலையிலும், கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை பயிற்சி பெற்றவர்கள் மட்டும் இதில் கலந்து காள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## மௌன ஊர்வலம்

கொழும்புத்துறை, ஆக. 15

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் இன்று புதன்கிழமை மௌன ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளது.

ஊர்வலம் கொழும்புத் துறையில் இருந்து ஆரம்பமாகி நல்லூரில் உள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் முடிவடையும். அங்கு மௌன அஞ்சலி செலுத்துவதுடன் பிரார்த்தனையும் நடைபெறும்.

தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரியும், தமிழ் மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் ஐந்து லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்து மகஜர் வெற்றி பெறவுமே இந்த ஊர்வலம் நடத்தப்படுகிறது என்று பிரஸ்தாப மன்றத்தின் அமைப்பாளர் திரு. எஸ். கஜேந்திரநாத் தெரிவித்தார். (இ-30)

## கால் நடை பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ். மாவட்டத்தில் உழவு மாடுகள், வண்டில் மாடுகள், பசுமாடுகள், கலப்பைகள் வைத்திருப்போர் உடனடியாக அவ்வப் பகுதிகளிலுள்ள கமநல சேவைகள் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ளோருக்கும் இவ் வேண்டுகோள் பொருந்தும்.

உடனடியாக பதிவு வேலைகளை மேற்கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது. [இ]

## சவூதிக்கு ஆதரவாகப் படை அனுப்ப பாகிஸ்தானும் முடிவு

லண்டன், ஆக. 15

ஈராக் தாக்குதலில் இருந்து சவூதி அரேபியாவைப் பாதுகாக்கும் அரபுப்படைகளுடன் சேர்ந்து பணிபுரியத் தனது துருப்புக்களை அனுப்பப் பாகிஸ்தானும் தீர்மானித்து உள்ளது.

ராவல் பிண்டியில் நேற்று நடைபெற்ற உயர் நிலை மாநாட்டில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

பாகிஸ்தானும் தனது துருப்புக்களை அனுப்பவேண்டும் என்று சவூதி அரேபியா கோரிக்கை விடுத்திருந்தது

இதனிடையில் ஈராக்கின் எண்ணெயை ஏற்றவரும் கப்பல்களை வழி மறித்துத் திருப்பிவிட வளைகுடாவில் நிறுத்தப்பட்டுள்ள தமது யுத்தக்கப்பல்களுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும்உத்தர விட்டுள்ளன. (இ - எ)

## இன்று நல்லூரில்

கொழும்புத்துறை, ஆக 15

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான இருபதாம் திருவிழா சந்தான கோபாலர் உற்சவம் இன்று புதன்கிழமை காலை ஏழு மணிக்கும், கைலாசவாகனம் மாலை ஐந்து மணிக்கும் நடைபெறும். (இ - 30)

## பால் உற்பத்தி குறைவு

வல்வெட்டித்துறை, ஆக .15

வடமராட்சிப் பகுதியில் கால்நடை உணவான தவிடு, பிண்ணாக்கு, உழுத்தங் குறுணி போன்றவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பால் உற்பத்தி குறைந்துள்ளது. [இ-160]

## குஜ்ரால் மாஸ்கோ பயணம்

புதுடில்லி, ஆக. 15

வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியப் பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் விஷயங்கள் குறித்து சோவியத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் [illegible] நேற்றுக்காலை மாஸ்கோ பயணமானார். (இ-எ)


## பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

இப்போது இடம்பெயர்ந்திருப்பதனால் வெவ்வேறு அலுவலகங்களில் தமது வருகையைப் பதிவு செய்கின்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சிச் சேவை ஊழியர்கள் அனைவரும் இன்று முதல் தத்தமது நிரந்தர அலுவலகங்களுக்குச் சென்று தமது தினசரி வருகையைப் பதிவு செய்தல் வேண்டும் எனவும் எக்காரணம் கொண்டும் தற்காலிக இடங்களில் தொடர்ந்தும் கையொப்பமிடலாகாது எனவும் கேட்டுக் கொள்ளுகின்றேன். இதனால் ஏதாவது கஷ்டங்கள் இருப்போர் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும.

சு. டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்
13 – 08 – 90 [சி-5166]



## அரசாங்க அறிவித்தல்

யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர் / ஊழியர்கள் நாட்டு நிலைமை காரணமாக தற்காலிகமாக இடம் பெயர்ந்து கடமையாற்றும் நிறுவனங்களிலிருந்து, தமது முன்னைய நிறுவனங்களுக்கு 16 – 08 – 90 க்கு முன்னர் கடமையைப் பொறுப்பேற்குமாறு வேண்டப்படுகிறார்கள்; இவ் உத்தியோகத்தர் / ஊழியர்களை மேற்படி திகதிக்கிடையில் விடுவிப்பது அந்தந்த நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் / ஊழியர்களின் வேதனங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

ந. கனகசபை
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
(C/5164)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
20 – 03 – 1929

மறைவு:
07 – 08 – 1988

திதி:
15 — 08 — 1990



### திருமதி தவமணி அப்பையா

ஆண்டுகள் பல கடந்தாலும் எமது உள்ளங்களில்
உங்கள் நினைவுகள் நிறைந்திருக்கும் அம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 1 புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். [13971]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. தி. மு. க. தலைமை அலுவலகம்

# நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை யாருக்கும் உரிமை கிடையாது

சென்னை, ஆக. 15

அ. தி. மு, க. தலைமை அலுவலகக் கட்டடம் தொடர்பான தகராறு நீதிமன்றத்தால் தீர்க்கப்படும் வரை, எந்த அணியினரிடமும் அது ஒப்படைக்கப்பட மாட்டாது என்றுபொலீஸார் கூறியிருக்கின்றனர்.

தலைமையகத்தைத் தங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலாவிடம் அ. தி. மு. க. - ஜெயலலிதா பிரிவு பிரமுகர்கள் நேற்று மனுஒன்றை நேரடியாகச் சென்று சமர்ப்பித்தனர். [உ-எ]

# இந்திய ஜனாதிபதியிடம் முறையீடு செய்ய முடிவு

சென்னை. ஆக. 15

அண்ணா தி. மு. க தலைமைக் காரியாலயக் கட்டடத் தகராறு பற்றிய விஷயத்தில் நியாயம் கோரி ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் முறையிடுவது என்று அ. தி மு. க [ஜெயலலிதா பிரிவு]-இந்திரா காங்கிரஸ் கூட்டணி தீர்மானித்து உள்ளது.

சென்னையில் இந்திராகாங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் கடந்த திங்கள்நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸ், அ. தி. மு. க. ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, அப்துல் சமது தலைமையிலான முஸ்லிம் லீக் ஆகியன இச்கூட்டத்தில் கலந்து கொண்டன. [உ-எ]

# இடம் பெயர்ந்த ஆசிரியர் முற்பணம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 15

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்த 450ஆசிரியர்களுக்கும் ஜூலை மாதத்துக்குரிய சம்பள முற்பணம் வழங்கப்பட்டு விட்டது.

பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களில் இருந்து கடமைலீவில் வந்து திரும்ப முடியாத ஆசிரியர்களுக்கான சம்பள முற்பணம் அடுத்தவாரம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதே நேரம் வெளி மாவட்டங்களில் இருந்து சொந்த லீவில் வந்து கடமைக்குத் திரும்ப முடியாத ஆசிரியர்களுக்கு முற்பணம் வழங்குவதற்கான அங்கீகாரத்தையும், பணத்தையும் கொழும்பு கல்வி அமைச்சு அதிகாரிகளிடம் கோரியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ - 3)

# விமானத் தாக்குதலை நிறுத்தக் கோரிக்கை

யாழ், முல்லைத்தீவு மாவட்டங்களில் சண்மூடித்தனமாக நடத்தப்படும் விமானக் குண்டுவீச்சையும் ஆட்லறி ஷெல் தாக்குதலையும்நிறுத்துமாறு யாழ்ப்பாணம் பிரசைகள்குழு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கோரியுள்ளது.

இம்மாதம் ஆறாம் திகதியிட்டு அனுப்பப்பட்டுள்ள அந்த மகஜரில் இரண்டு மாவட்டங்களிலும் விமானத் தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்புகள், அழிவுகள் குறித்துப் புள்ளிவிவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் உணவுப்பொருள் மற்றும் மருந்துவகை விநியோகத்தைச் சகஜ நிலைக்குக் கொண்டு வரவும்-

யாழ் போதனா ஆஸ்பத்திரியையும் ஏனைய மருத்துவமனைகளையும் மீண்டும் திறப்பதைத் துரிதப்படுத்தும்படியும்-

யாழ்ப்பாணத்திற்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் மின்சார விநியோகத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கும் படியும் எமது சமிட்டி தங்களைக் கேட்டுக்கொள்கிறது- என்றும் அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது. [அ-எ]

# தென்னிந்திய திருச்சபை அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 15

உடுவில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு ஒரு மாதத்துக்கு போதுமான உணவுப்பொருள்களை நிவாரணமாக தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனம் வழங்கி வருகிறது.

சீனி, மா, பால்மா ஆகியவை முதல் வாரத்துக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும். தொடர்ந்து வாரா வாரம் இவை வழங்கப்பட இருப்பதாகவும் வண. ஏ. ஜெயக்குமார் தெரிவித்தார்.

இதேபோன்று நெடுந்தீவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, செட்டிக்குளம் பகுதிகளில் உள்ள அகதிகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லைக் கந்தா!

ராகம்:- பாகேஸ்வரி தாளம்:- ஆதி

பல்லவி

இன்றொரு பணிதந்து நின்றெனக் கருள்செய்தாய்!
என்குரு நல்லைக் கந்தா — கடம்பா
— [இன்......]

அனுபல்லவி

செந்தமிழ்ச் சொல்லாய்ந்து செந்தமிழிசை சேர்த்து
செந்தமிழ்த் தலைவாஉன் அந்தமில் புகழ்பாட
— [இன்......]

சரணம்

இராஜவிழி விழிக்கக் குருடனெனைப் பணித்தாய்!
காதவழி நடக்க முடவனெனைப் பணித்தாய்!!
பேரவையில் பாட ஊமையெனைப் பணித்தாய்!
பேரருளால் பணித்த உன்பணியை முடித்தேன்!!
— [இன்......]

— ச. முருகையா —

[இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய 20 ஆம் திருவிழா]

# இரும்புச்சத்து குளிசைகளுக்கு நகரத்தில் பெரும் தட்டுப்பாடு

## கர்ப்பிணித் தாய்மார் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 15

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மிக அவசியமானதும்- கட்டாயம் உட்கொள்ள வேண்டியதுமான இரும்புச் சத்துக்குளிசைகளுக்கு(அயன்) யாழ். நகரில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்தக் குளிசை இல்லாததால் தாய்மார்கள் பெரும் விபரீதங்களை எதிர்நோக்க நேரிடலாம் என வைத்திய அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மாருக்குப் போதிய இரும்புச்சத்துஇல்லாவிடில் குருதிச் சோகை ஏற்பட்டு அவர்கள்இறக்கக்கூடிய ஆபத்துக்கூட இருப்பதாகவும் இல்லாவிடில் நிறைகுறைந்த குழந்தைகளைப் பிரசவிக்கும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரும்புச்சத்து போதிய அளவு உட்கொள்ளாத கர்ப்பிணிகளுக்கு நிறை குறைந்த குழந்தைகள் - பிறந்து சில நாட்களில் இறக்கும் வாய்ப்பு அதிகம் உண்டெனவும், அக்குழந்தைகள் எளிதில் தொற்றுநோய்களால் பீடிக்கப்பட்டு மரணமாகிவிடும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் குளிசைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவது குறித்து யாழ். மாநகரசபைமருத்துவ சுகாதார அதிகாரி ஒருவர் கருத்துவெளியிடுகையில்-

எமது 'கிளினி'க்குகளுக்கு வரும் தாய்மார்கள் பெரும்பாலும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள்.

அவர்களுக்கு மாதத்திற்கு 90 குளிசைகள் வழங்குவது வழக்கம். ஆனால் இப்போது எமது கையிருப்பில் உள்ள குளிசைகள் எல்லா தாய்மாருக்கும் முழுஅவில் வழங்கமுடியாதநிலை இருக்கிறது.

குளிசைகள் குறைவாக கொடுப்பதால் தாய் ஒருவர் பூரணமாக பலன் அடைய முடியாது. இதனால் எல்லோரும் பாதிக்க நேரிடும்.

இரும்புச் சத்தைப் பெறுவதற்கு இலை வகைகள் அதிகம் சாப்பிட வேண்டும். ஆனால் நகரத்தில் உள்ளவர்களுக்கு அவற்றையும் பெறுவது கஷ்டம்- என்றும் தெரிவித்தார். [ஒ-10]

## 12 மாணவர் பலி

ஹைதராபாத், ஆக. 15

ஆந்திர மாநிலம், விசாக பட்டினத்தில் பாடசாலைக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 12 மாணவர்கள் உயிரிழந்தனர்.

30 மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்திய சுதந்திரக் கொண்டாட்டத்துக்காக பாடசாலைக்கட்டடத்தை மாணவர் அலங்கரித்துக் கொண்டிருந்த சமயம் இவ்விபத்து இடம் பெற்றது. [எ]

## மினி பஸ் உரிமையாளர் கூட்டம்

இயக்கச்சிக்கும், கேரதீவுக்கும் அப்பால் சேவையில் ஈடுபடும் சகல மினிபஸ் உரிமையாளர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலைக்கு வருமாறு வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா கோரியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ.3)

# அகதிகளுக்கு லொறிகளில் உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகளுக்கு தென். இந்திய திருச்சபை யாழ். ஆதீனம் ஏழு லொறிகளில் உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து கொண்டு வந்துள்ளது.

வட்டுக்கோட்டை தேவாலய குருவானவரான வண. ஏ. ஜெயக்குமாரும், கிளிநொச்சி தேவாலய குருவானவர் வண. எஸ். ஜெயநேசனும் கொழும்புக்குச் சென்று உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்த்தனர். மற்றும் இரு லொறிகளில் கிளிநொச்சிமாவட்டத்துக்கு உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்டன.

மா, சீனி, பால்மா, பருப்பு போன்ற உணவுப் பொருள்களையே இவர்கள் கொண்டு வந்தனர். [இ-3]

# கப்பல் மூலம் வந்த பொருள் மன்னாரில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 15

கப்பல் மூலம் மன்னாருக்கு வந்த உணவுப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்க மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த ஒன்பதாம் திகதி மன்னாருக்கு வந்த கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையே முடிவடைந்தன.

400 தொன் நிறையில் அரிசி, மா, சீனி, பால்மா, மெழுகுதிரி, தீப்பெட்டி போன்ற பொருள்கள் மன்னாருக்கு அனுப்பப்பட்டிருந்தன. (இ-3)

## பாதை தெரியாத,...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் எல்லோரும் ஏறுங்கள்' என்று கூறியதால், அவரின் பேச்சைக் கேட்டு நாம் ஆளுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா செலுத்தி இந்தப் படகில் ஏறினோம்.

இந்தப் படகுக்கு முன்னால் இரண்டு படகுகள் புறப்பட்டன. எமது படகைச் செலுத்திய படகோட்டிக்குப் பாதை தெரியவில்லை என்று நினைக்கிறேன். அவர் முன்னுக்குச் சென்ற படகுகளைக் குறிவைத்து அதன்பின்னால்சென்றார்.

ஆனால் அந்தப்படகுகளின் பாதையைத் தவறவிட்டதும் அவரால் படகைச் சரியான பாதையில் செலுத்த முடியவில்லை.

படகோட்டியிடம் திசையறிகருவி [''கம்பஸ்''] கூட இருக்கவில்லை.

எரிபொருள் முடியும் வரை அவர் படகைச் செலுத்தினார்.

[illegible] இருந்தவரும் தமக்குத் தேவையான உணவைச் சேமித்து வைத்து உண்டனர். தண்ணீரைக் குடித்தனர்.

நாம் பட்டினியாலும் தண்ணீர்த் தாகத்தினாலும் வதங்கினோம்

எரிபொருள் இல்லாது நடுக்கடலில் தத்தளித்தபோது-

''படகு இயந்திரம் இழுக்க முடியாமல் இருக்கிறது; படகுக்குள் தண்ணீர் புகுந்துவிடும். ஆகவே உங்கள் பொருள்கள், உடைமைகள் அனைத்தையும் கடலுக்குள் வீசுங்கள்'' என்று படகோட்டி சொன்னார்.

அதனால் எமது உடைமைகளை கடலுக்குள் வீசினோம்.

நாள் செல்லச்செல்லதமக்கு இடம் தெரியாது என்பதை மறைக்க படகில் இருந்தவர்கள் மீது படகோட்டி எரிந்து விழுந்தார்.

இறுதியாக சிகிரியா கப்பல் படகுக்கு அருகே வந்தது. அதைக் கண்டதும் படகோட்டி கடலில் பாய்ந்து நீந்தி நழுவிக் கொண்டார். - இவ்வாறு அவர் கூறினார்.

## கடலில்-...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் மகாவித்தியாலய சங்கீத ஆசிரியை செல்வி. இராஜமாணிக்கம் உமாதேவி (வயது 26)

★ திருமதி இரவிச்சந்திரன் யோகமலர் (வயது 28)

★ திருமதி முருகேசு பொன்னம்மா (வயது 48) - நெல்லியடி.

★ செல்வன் சூரியமூர்த்தி விஜயன் (வயது 4)- திருமலை.

★ செல்வி சூரியமூர்த்தி பிரியா (வயது 2) - திருமலை.

இவர்களில் திருமதி முருகேசு பொன்னம்மாவின் சடலம் மிகவும் பழுதடைந்த நிலையில் கடலில் வைத்து கைவிடப்பட்டதாகவும் —

ஏனைய நான்கு பேரினதும் சடலங்கள் கரை ஒதுங்கிய படகிலிருந்து மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரியவந்தது.

நடுக்கடலில் தத்தளித்த படகைக் கண்ட இலங்கைக் கடற்படைக் கப்பல் ''வீரசூரியா'' அந்தப் படகை இழுத்து வந்ததாகவும் —

படகில் இருந்தோருக்கு முதலுதவிச் சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டதாகவும் —

அந்தக் கப்பலின் கப்டன் பறங்கி இனத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் அவர் தமிழ் அகதிகளுடன் அன்பாக நடந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் நங்கூரமிட்டு உணவுப்பொருள்களை இறக்கிக்கொண்டிருந்த கப்பலுக்கு, ''வீரசூரியா''கப்பலில் இருந்து தகவல் அறிவிக்கப்பட்டதாகவும்-

அதனையடுத்து உணவுக் கப்பலில் இருந்து செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும்-

செஞ்சிலுவைச் சங்கத்தினர் தலையிட்டு அகதிகள் படகை கரைக்குக் கொண்டு வந்ததாகவும் கூறப்பட்டது. [உ-118]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதத்தை ஜெயலலிதா கைவிட்டார்

அ.தி.மு.க தலைமையகத்தை தங்களிடம் ஒப்படைக்கக் கோரி அக்கட்சியின் இரு பிரிவுத் தலைவர்களான செல்வி ஜெயலலிதாவும் திருநாவுக்கரசும் தனித்தனியே ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை கட்டடம் எந்தச்சாராரிடமும் ஒப்படைககப்பட மாட்டாது என பொலீஸார் அறிவித்ததை அடுத்து திருநாவுக்கரசு, கடந்த திங்கள் காலை ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தை திங்கள் மாலையே கைவிட்டார்.

செல்வி ஜெயலலிதா திங்கள் காலை ஆரம்பித்த உண்ணாவிரதத்தை நேற்று மாலை கைவிட்டார்.

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தி அக்கட்சியின் மாநிலத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மூலம் விடுத்த வேண்டுகோளை அடுத்தும்–

ஏனைய தோழமைக்கட்சிப் பிரமுகர்கள் கேட்டுக்கொண்டதையும் அடுத்தே ஜெயலலிதா உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (உ)

(மேலும் செய்திகள் 3 ஆம் பக்கத்தில்)

# அம்பாறையில் 5 சிப்பாய் பலி!

லண்டன், ஆக. 15

அம்பாறை மாவட்டத்தில் ஓரிடத்தில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து இராணுவ சிப்பாய்கள் உயிரிழந்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் எங்கு இடம் பெற்றது என்பது பற்றிய விபரம் வெளியாகவில்லை. (உ)

# இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 15

பலாலிப் பகுதியில் நேற்று மாலை நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.

உரும்பராயைச் சேர்ந்த விஜயகுமார்(வயது25,,ரட்ணசிங்கம் ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். [ஓ-5-9]

# நள்ளிரவில் வந்து நகரை நடுங்க வைத்த எமதூதர்!

யாழ்ப்பாணம, ஆக. 15

நேற்று [செவ்வாய்] அதிகாலை யாழ்.நகர மக்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளையில் வானில் ''எமதூதர்கள்'' இருவர் பெரும் இரைச்சலுடன் வந்து எல்லோரையும் அச்சுறுத்தினார்கள்!

நித்திரையிலிருந்து அரைத் தூக்கத்துடன் எழுந்த மக்கள் பதறியடித்துக் கொண்டு பதுங்கு குழிகளுக்குள் புகுந்தனர். திங்கட்கிழமை பகலில் விட்ட ''லீவை'' ஈடுசெய்வது போல பொம்மர்கள் இரண்டு நள்ளிரவில் எமதூதர்களாக வந்திருந்ததால் மக்கள் பெரும் பீதி அடைந்தனர்.

பகலிலேயே கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தும் பொம்மர்கள் காரிருளில் என்ன காடைத்தனம் புரியுமோ என ஏங்கித் தவித்தார்கள்.

பொம்மர்களை தொடர்ந்து ஹெலியும் வந்தது. அதுவும் பேரிரைச்சலுடன் தாழப் பறந்து மக்களைப் பயமுறுத்தியது.

சுமார் ஒரு மணி நேரம் பறந்துகொண்டிருந்த பொம்மர்கள் கோட்டைப் பகுதியில் இரண்டு குண்டுகளை வீசிவிட்டுச் சென்றுவிட்டன. ஹெலியும் வேட்டுக்களைத் தீர்த்தது. [ஓ-5]

# ஓய்வூதிய வவுச்சர்கள் தபால்மூலம் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள வங்கிகளில்ஓய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் தபால்மூலம் நேற்று அனுப்பப்பட்டுள்ளதாக செயலக ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜூலை மாதத்துக்குரிய வவுச்சர்களே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வவுச்சர்களை தபால்நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அந்த அதிகாரி சொன்னார். (ஓ-3)

# 2,000 தொண்டர் கைதாகினர்

சென்னை, ஆக. 15

அ.தி.மு.க.வின் இரு பிரிவு அணித் தொண்டர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறாமல் தடுக்க தமிழகம் முழுவதும் இரு அணிகளையும் சேர்ந்த 2 ஆயிரம் தொண்டர்களை பொலீஸார் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர். [உ–எ]

# பொதுமக்கள் உயிரிழப்பு

லண்டன், ஆக. 15

அம்பாறை அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் முஸ்லிம் ஒருவர் பலியானார். பலர் காயமுற்றனர்.

கிழக்கில் வேறு ஒரு சம்பவத்தில் ஐந்து பொதுமக்கள் உயிரிழந்ததாகவும் —

திருகோணமலைக்குத் தெற்கே கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் 6 முஸ்லிம்கள் கொலையுண்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

வவுனியா கிராமங்களில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் பத்துப் பொதுமக்கள் வரை உயிரிழந்தனர். [உ]

# கலைஞரின் வானொலி உரை

சென்னை, ஆக. 15

இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி இன்று புதன் மாலை 6 50 மணிக்கு முதலமைச்சர் கருணாநிதி வானொலியில் சுதந்திரதின உரை நிகழ்த்துகிறார். [ஓ-எ]

# மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்

பருத்தித்துறை, ஆக. 15

அகதிகள் படகில் சென்று, பசி,பட்டினியுடன் ஐந்துநாள் பரிதவித்த பின்னர், மயக்க நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் 22 பேரின் விபரம் வருமாறு:–

சு.விமலன் (வயது 06), எம். சுகுணேஸ்வரன் (25), ம.கமலநாதன் (23), எம்.பிரபாகரன்(21), அ.பிரியா(07), அ.வித்தியா(09),

ஐ. அழகத்துரை (48), இ. ஞானச்சந்திரன் (30), எம். மதீஸ்வரன்(22), எஸ். செல்வமாறன்(18), கே. சிவநேசன்(18), எம்.மனோகரன் (26), கே. கிருஷ்ணகரன்(27) எம்.ஜீவபாபு(16), ஆர்.சந்திரகுமார் (30), கே.சிவகேசன் (20), எஸ்.சிவச்சந்திரன்(30), எம்.குருபரன்(20), எம்.ராஜகுரு(20), வி. ஜெகதாசன்[20], எஸ். ராஜேஸ்கரன்[23], ஜே. ரவீந்திரன் [22]. [உ-118]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னபூரணி சோமசுந்தரஸ்தபதி

திருமதி அன்னபூரணி சோமசுந்தரஸ்தபதி அவர்கள் 13-08-90 அன்று சிவபதம் எய்தினார். அன்னார் சோமசுந்தரஸ்தபதியின் அன்பு மனைவியும், கெங்காதரனின் அன்புத் தாயாரும், சொர்ணாம்பிகையின் மாமியாரும், பாலசுந்தரத்தின் அப்பம்மாவும், தமிழ் நாடு நாட்டரசங்கோட்டை திருமதி மரகதவள்ளி இராமச்சந்திரனின் அன்புச் சகோதரியும், தமிழ்நாடு நாகர் கோவில் திரு. திருமதி நடராஜன் ஆச்சாரியின் சம்பந்தியும், சாலஞ்சென்ற கோண்டாவில் தங்கவேல் ஸ்தபதி இரத்தினம்மாவின் மைத்துனியும், இராமமூர்த்தி, சந்திரசேகரனின் அத்தையும், கலாரமணன், யசோதாதேவி, உமையாள், ஞானகணேசன் (Canada), சாந்தினி ஆகியோரின் அன்பு பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் கோண்டாவிலில் அவரது இல்லத்தில் 14-08-90 செவ்வாய்க்கிழமை நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சோமசுந்தரஸ்தபதி

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில். [14036]

## கதிரிப்பிள்ளை கந்தசாமி

மல்லாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 12 - 08 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் கருணாகரன் (கொலண்ட்), சுபாஸ்கரன் (பிரான்ஸ்), கிருஸ்ணாகரன் (பிரான்ஸ்), சுமணாகரன், கருணாவதி, கலாவதி, சுமணாவதி ஆகியோரின் அன்புத்தந்தையும். ரவிச்சந்திரன், வசந்தி (கொலண்ட்), கிருஸ்ணாமூர்த்தி (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆறுமுகம் (சாரதி), த. இராசம்மா வி. நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் மல்லாகம் மயானத்தில் 12 - 8 - 90 ஞாயிற்றுக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது; தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
இ. ரவிச்சந்திரன்
(மருமகன்)

ஐயனார் கோவிலடி,
மல்லாகம். [14037]

## சீனியர் சின்னத்துரை

சுன்னாகம் வடக்கைச் சேர்ந்த சீனியர் சின்னத்துரை 14 - 08 - 90 இல் காலமாகிவிட்டார். இவர் இரத்தினத்தின் கணவரும்; சகுந்தலா, மகாலிங்கம் [ஆசிரியர் ஸ்கந்தவரோதயா கல்லூரி], பாலச்சந்திரன், கருணராசன், இராசேந்திரன் ஆகியோரின் தந்தையும்; சுந்தரலிங்கம், யோகாம்பிகை [லங்கா சீமெந்து லிமிட்டெட்] ஆகியோரின் மாமனாரும்; கனகம்மா, ஆச்சிமுத்து, காலம்சென்ற செல்லம் ஆகியோரின் சகோதரரும்; இராசம்மா, வேலுப்பிள்ளை [உணவு கட்டுப்பாட்டு திணைக்களம்], இராசதுரை [வ. பி. போ. ச.], நல்லையா ஆகியோரின் மைத்துனரும்; விஜித்தாவின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 15 - 08 - 90 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
S. மகாலிங்கம்.

சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம். (14038)

# மரண அறிவித்தல்கள்

## திரு. பிள்ளையினார் நல்லதம்பி

புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. பிள்ளையினார் நல்லதம்பி காலமாகிவிட்டார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், நடராசா, முத்தையா, காலம்சென்ற சிந்தாமணி ஆகியோரின் சகோதரரும், பாலசிங்கம், கிருபானந்தன், பாஸ்கரன் [சுவிட்ஸலாந்து], புனிதம், கிளி ரெம்பை, மலர் [நோர்வே] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராசரட்ணம், சாம்பசிவம், நடராசா, கனகலிங்கம் [நோர்வே], லலிதா ராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 15-08-1990 [இன்று] பிற்பகல் 3-00 மணிக்கு மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
(13635) பி. முத்தையா

## திருமதி நவமணி அருளானந்தம்

நவமணி அருளானந்தம் 14-08-90 அன்று காலமானார். இவர் இளைப்பாறிய காணி அபிவிருத்தி இலாகா களஞ்சியப் பொறுப்பாளர், திரு. த. அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சறோஜினி (West Germany), எட்வேட், மனோகரன் (சுகாதாரப்பகுதி, யாழ் மாநகரசபை), அன்ரன், ரவீந்திரன் (யாழ் தபாலகம்), திருமதி சாந்தினி, பேனாட், செல்வி மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அ. சலமோன் தம்பதிகளின் புதல்வியும், மு. சோமஸ்கந்தமூர்த்தி (West-Germany), பற்றிமா மனோகரன் (வெஸ்லி கொலிஜ் கொழும்பு), ந. பாலசுந்தரம் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், அருணன், மனோஜினி, பாலகுமார், சர்மிளா, நிர்மலா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 60/1 A, சலமன்ஸ் லேன், பழைய பூங்கா வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக 15-08-90 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. அருளானந்தம்

60/1 A, சலமன்ஸ் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். [13633]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org